# Asylum Advice

## புகலிடம் கோருதல்



# பிரிவு 1
# புகலிடம் கோருதல்

## 1.1 புகலிடத்திற்கு விண்ணப்பிக்கும் தேவை உங்களுக்கு உள்ளதா ?

உங்கள் நாட்டிற்கு திரும்ப அச்சம் உண்டென்றால் நீங்கள் புகலிடக் கோரிக்கை விடுக்க வேண்டும் அகதி அந்தஸ்து தொடர்பான 1951 ம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கையின் கீழ் அகதியாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு கீழ்கண்ட ஏதாவது ஒரு காரணத்தின் அடிப்படையில் உங்கள் நாட்டை விட்டு வெளியேறியதுடன் உங்களுக்கு தீங்கு இழைக்கப்படும் என்பதற்கு வலுவான ஆதாரத்தைக் கொண்ட அச்சம் இருத்தல் வேண்டும்.

- உங்கள் இனம்
- உங்கள் சமயம்
- உங்கள் தேசியம்
- உங்கள் அரசியல் கருத்துகள் அல்லது
- குறிப்பிட்ட சமூகக் குழுமம் ஒன்றில் உங்கள் அங்கத்துவம்.

உங்கள் கோரிக்கை மேல் குறிப்பிட்ட ஐந்து காரணங்களில் ஒன்றின் அடிப்டையிலும் இல்லை என்பதால் நீங்கள் ஒரு அகதி அல்ல என்று முடிவு செய்ப்பட்டு ஆனால் நீங்கள் நாட்டிற்குத் திரும்பினால் உங்களுக்கு பாரிய தீங்கு நேரிடும் என்ற அபாயம் உள்ளது என நம்புவதற்கு வேறு காரணங்கள் உண்டென்றால் மனிதாபிமான அடிப்படையில் பாதுகாப்பு பெறுவதற்கு தகுதி உடையவர் ஆகுவீர்கள்

சர்வதேசப் பாதுகாப்பு ( புகலிடம் அல்லது மனிதாபிமானப் பாதுகாப்பு ) கோருவதற்கு தகுதி இல்லை என்று நீங்கள் கருதினால் ஆனால் ஐக்கிய ராச்சியத்தில் வேறு காரணங்களுக்காக தொடர்ந்து தங்கியிருக்க விரும்பினால் சட்ட ஆலோசனை பெற வேண்டும்.

சர்வதேசப் பாதுகாப்புக்கான உங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் ஐக்கிய ராச்சியத்திற்கு ( UK ) வருவதற்கு கொடுக்கும் விண்ணப்பங்களைப் பாதிக்கும்

## 1.2 எங்கே என்னால் புகலிடம் கோர முடியும்.

ஒரு விமான நிலையத்திலா, துறைமுகத்திலா அல்லது சர்வதேச ரயில் நிலையத்திலா உள்ளீர்கள்?
உங்களுக்கு புகலிடம் கோரும் எண்ணம் இருந்தால் ஐக்கிய ராச்சியத்துக்குள் வந்ததும் விரைவாக இதனைச் செய்வது முக்கியம்.˙ தீங்கில் இருந்து தப்பி வரும் உங்களுக்கு

பாதுகாப்பு தேவை எனக் கருதினால் உடனடியாக குடிவரவு அதிகாரி ஒருவரைக் காண வேண்டும் எனக் கேட்க வேண்டும். நிங்கள் குடிவரவு அதிகாரியுடன் பேசும் பொழுது உங்களுக்கு ஆபத்து உள்ளதால் நீங்கள் ஐக்கய ராச்சியத்தில் புகலிடத்துக்கு விண்ணப்பிப்பதை உறுதி செய்ய வேண்டும். குரோய்டன் செல்வதற்கு ஹோம் ஆபீஸ் பணம் தராது. பயண செலவுகுளை நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்

நீங்கள் ஏற்கனவே ஐக்கிய ராச்சியத்தல் இருப்பவரா ?
நீங்கள் எற்கனனே ஐக்கிய ராச்சியத்தில் உள்ளவராக இருந்து புகலிடம் கோர விரும்பினால் Croydon (South-East London). இல் உள்ள அகதிகளை உள்ளெடுக்கும் பிரிவுடன் சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை கோர வேண்டும் உங்கள் கோரிக்கையில் உங்களில் தங்கியருப்பவர்களாக குறிப்பிட்டிருப்போரும் உங்களுடன் இச்சந்திப்புக்கு செல்ல வேண்டும். நீங்கள் ஐக்கியராச்சியத்துக்கு வந்து சேர்ந்ததன் பின் அல்லது உங்கள் சூழல் மாறியுள்ளதால் உங்களுக்கு சர்வதேசப் பாதுகாப்பு தேவை என்பதை அறிந்ததும் எவ்வளவு விரைவாக புகலிடம் கோர முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டும்

புகலிடக் கோரிக்யையாளர்களை உள்ளெடுக்கும் பிரிவில் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கேட்க அழைக்க வேண்டிய இல: 020 8196 4524

பணிபுரியும் உள்வாங்கும் நேரம் - திங்கள் முதல் வியாழன் வரை காலை 9:00 முதல் மாலை 4:45 வரை , மற்றும் வெள்ளி காலை 9:00 முதல் மாலை 4:30 வரை

புகலிடக் கோரிக்கையாளர்களை பிரிவு இருக்கும் இடம்:
40 Wellesley Road, Croydon CR9 2BY

நீங்கள் ஊனமுற்றோ அல்லது முடியாமலோ ஸ்காட்லாந்தில் இருந்தால் உங்கள் நேர்முக பரிசோதனையை க்லச்கோவ்வில் வைக்க அனுமதிக்கலாம். அனால் இதை ஹோம் ஆபீஸ் தான் தனி தனியாக கருதி முடிவு செய்யும்

உங்களின் சந்திப்புக்கான ஒழுங்கை மாற்ற அல்லது இரத்துச் செய்யத் தேவையெனின் விரைவாக அழைக்க வேண்டிய இல: 020 8196 4524.

நீங்கள் ஊனமுற்றோ அல்லது முடியாமலோ ஸ்காட்லாந்தில் இருந்தால் உங்கள் நேர்முக பரிசோதனையை க்லச்கோவ்வில் வைக்க அனுமதிக்கலாம். அனால் இதை ஹோம் ஆபீஸ் தான் தனி தனியாக கருதி முடிவு

## 1.3 புகலிடம் கோருவதற்கான நடைமுறைக்கு ஆலோசனைகளும் வழிகாட்டுதலும்

புகலிட உதவி (Asylum Help ) குடிவரவாளர் உதவி (Migrant Help) எனும் தர்மஸ்தாபனத்தின் ஒரு பகுதி புகலிட உதவி (Asylum Help) யின் ஊடாக புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இலவச ஆலோசனைகளும் வழிகாட்டுதலும் இவ் அமைப்பு வழங்குகிறது புகலிட உதவி (Asylum Help) புகலிடம் கோருதல், புகலிட நடைமுறை,

தங்குமிடவசதி, பொருளாதார உதவி, சட்டப்பிரதிநிதித்துவம், பெறுதல், மற்றும் வேறு புகலிட உதவி விவகாரங்கள்.

புகலிடப் பரிசோதனை நடைமுறை, மற்றும் முழு நேர்காணல் ,பற்றிய தகவல்களுடன் உங்கள் வழக்கில் முடிவ எடுக்கப் பட்ட பின் என்ன நடக்கும் என்பது பற்றிய தகவல்களை ASYLUM ADVICE UK இணையதளத்தில் ஒலி மற்றும் எழுத்து வடிவத்தில் காணலாம். இவை 15 முக்கிய மொழிகளில் கிடைக்கும் www.asylumhelpuk.org. எனும் எங்கள் இணைய தளத்தைப் பாருங்கள்

ஒரு ஆலோசகருடன் நேரடியாகப் பேச விரும்பினால் தயவு செய்து *இலவச Asylum Advice UK யை 0808 8000 642 அழைக்கவும் உங்கள் புகலிடக் கோரிக்கை தொடர்பாக Asylum Help சட்ட ஆலோசனை வழங்க முடியாது என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

## புகலிடம் கோரும் வரைபடம்



## 1.4 உங்களுக்கு புகலிட ஆதரவ தேவையா?

உங்களின் கோரிக்கை பதிவு செய்யப்பட்ட பின் புகலிட ஆதரவுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றால் அல்லது உங்களுக்கு அழைப்பு நியமனம் கொடுக்கபட்டிருந்தால் அழைக்க வேண்டிய இல எங்களது இலவச தொலைபேசி:

புகலிடம் உதவி கோரிக்கை க்கு இல: 0808 8000 643

உங்களுக்கு புரியும் மொழியில் சேவைகள் வழங்கப்படும்.

புகலிட ஆதரவு தொடர்பான மேலதிகத் தகவல்கள் www.asylumhelpuk.org இல் காணலாம்

நீங்கள் வீடற்றவர் அல்லது ஆதரவு அற்றவர் என்றால் தயவு செய்து புகலிடப் பரிசோதனையின் போது இதனைத் தெளிவு படுத்தவும். உங்களுக்கு தற்காலிக உதவி தேவையா என்பதை Home Office கணிப்பீடு செய்யும். பரிசோதனையின் பின்னர் உடனடியாக இது வழங்கப்படும்

நீங்கள் விசா வுடன் அல்லது சுயமாக சமாளித்துக்கொண்டு உக விற்கு வந்திருந்தால் நீங்கள் எப்படி சமாளித்தீர்கள் எங்கு உங்கள் பணத்தை செலவு செய்தீர்கள் என்று முழுமையாக கணக்கு கொடுக்க வேண்டும் . அது போன்ற உதவி இனியும் ஏன் கிடைக்காது என்று விளக்க வேண்டும் . அதற்கான சாட்சியங்களை உங்கள் நேர்முக தேர்வின் பொது சமர்பிக்க வேண்டும் . நேர்முக தேர்வில் இங்கு தங்குவதற்கான அனுமதி நிராகரிக்க பட்டால் புகலிட உதவி மையம் உங்களுக்கு தங்குவதற்கு உதவ முடியாது. அனால் நீண்ட காலம் தங்குவதற்கு மனு போட உதவி செய்யும்

## 1.5 உதவி பெற்று சுயவிருப்பத்தில் திரும்பதல்.

புகலிடம் கோர விருப்பம் இல்லை என்று நீங்கள் முடிவு செய்தால அல்லது நீங்கள் ஒரு கிரமம் அற்ற குடிவரவாளர் என்றால் அத்துடன் வீடு திரும்ப விரும்பினால் ஹோம் ஆபீஸ் உதவியுடன் சுயமாக திரும்புதல் திட்டத்தில் திட்டம்.

மேலும் விபரங்களுக்கு சுயமாக வெளியேறும் குழு:
www.gov.uk/return-home-voluntarily
Voluntary Departures Team: 0300 004 0202

**இப்பிரிவு பற்றி மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து புகலிட உதவி (Asylum Help ) உடன் தொடர்பு கொள்ளுங்கள்**

**www.asylumhelpuk.org**

**Asylum Advice UK 08088000642**
**Asylum Support Application UK இல: 08088000643**